**பெந்தொட பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 06 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 ஜுன் 15 ஆந் திகதியும், விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 29 திகதியும் சபை முதல்வருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து பெந்தொட பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 154,709 தொகைக்கான காணி மற்றும் கட்டட பராமரிப்பு கிரயம் மூலதனப் படுத்தியிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி உள்ளவாறு இயந்திரம் மற்றும் இயந்திர உபகரண மீதியில் கருவிகள் மற்றும் உபகரண பெறுமதியாகிய ரூபா 212,932 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் இயந்திர மற்றும் இயந்திர உபகரணங்களின் பெறுமதி மற்றும் மூலதன செலவீட்டுக்கான அரசிறை உதவுத் தொகை கணக்கின் மீதி அதே பெறுமதியினால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புத் தொகை 4,790,855 தொகைக்கான கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | கடன்கொடுத்தோர் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரியான தகவல்களை பெற்றுக்கொண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | காணி மற்றும் கட்டட பதிவேட்டில் உள்ளடங்கியுள்ள 46 காணித் துண்டுகளின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக பெறவேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,340,840 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | வருமானங்களை சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **பெறவேண்டிய கணக்கு** | | |
| | 1993 முதல் 2018 ஆண்டு வரையான காலத்துக்குரிய கூட்டுப்பெறுமதி ரூபா 55,079,542 தொகையான 05 பெற வேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ)** | **செலுத்தவேண்டிய கணக்கு** | | |
| | கூட்டுப்பெறுமதி ரூபா 6,627,985 தொகையான செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்தவேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோ கத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 307,110 தொகைக்கான 02 கணக்கு விடயங்களுக்குரிய தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**1.4 இணக்கமின்மைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | | |
| (i) விதி 33 | வீதவரி செலுத்துவதை புறக் கணித்துள்ள நபர்கள் தொடர்பான அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாணை அட்டவணை தயாரித்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் செயற்படுவேன். |
| (ii) விதி 145 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக விரிவான கூற்றொன்று தயாரிக்கப்பட்டு பேரேட்டில் காட்டப்பட்டு மீதிகளுடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. | விதியின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் உரிய முறையில் செயற்படுவேன். |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 371 | குறிப்பிட்ட வேலைக்கான முற்பணம் குறிப்பிட்ட கருமம் முடிவடைந்தவுடன் தீர்க்கப்பட வேண்டியதுடன், கடந்த ஆண்டுகளின் போது பெற்றிருந்த ரூபா 75,787 தொகைக்கான முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) நிதிப் பிரமாணம் 571 | 02 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 477,316 தொகை பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2015 ஜுலை 10 திகதிய 02/2015 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படாத 05 வாகனங்கள் அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கை | 08 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வேன். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

கணக்காய்விற்குச் சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,989,568 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 13,977,444 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்க ப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 22,567,724 | 31,687,457 | 21,178,858 | 25,896,886 | 22,123,117 | 18,156,859 | 18,283,719 | 10,121,944 |
| வாடகை | 660,000 | 419,190 | 367,920 | 100,640 | 1,270,000 | 528,568 | 1,038,522 | 50,050 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 611,250 | 546,050 | 535,450 | 14,850 | 626,500 | 635,150 | 727,350 | 18,250 |
| ஏனைய வரு மானங்கள் | 383,900 | 303,275 | 308,175 | - | 4,189,000 | 321,807 | 3,589,932 | 5,040 |
| மொத்தம் | 24,222,874 | 32,955,972 | 22,390,403 | 26,012,376 | 28,208,617 | 19,642,384 | 23,639,523 | 10,195,284 |

### 2.2.2 வீதவரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **நிலுவை வீதவரி**<br>இந்துருவ உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள விஷேட ஆதனங்களில் இருந்து 2019 செப்தம்பர் 30 திகதியிலுள்ளவாறு ரூபா 11,319,281 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 660,875 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 77,114,621 தொகை பெறவேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக முறையான திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நீண்ட காலத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு, திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம் முறைப்படுத்தப்பட வேண்டும். | காணி ஒன்று பெற்ற பின்னர் நீண்ட கால வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படும் என அறிவிக்கின்றேன். |

### 3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்** | | |
| (i) | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 13 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக அங்கீகாரத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) | ஆரம்ப தரத்தைச் சேரந்த 13 ஊழியர்களுக்கு இரண்டாம் தர அலுவலர்களுக்குரிய கடமைகள் சாட்டப்பட்டிருந்தன. | கடமைகள் முறைப்பிரகாரம் சாட்டுதல் செய்யப்பட வேண்டும். | கடமைகள் முறைப்பிரகாரம் சாட்டுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| **(ஆ)** | **ஊழியர் கடன்** | | |
| | ஓய்வு பெற்ற, இறந்த, சேவையை விட்டுச் சென்றுள்ள 19 ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 66,197 தொகை நீண்ட காலமாக அறவிடப்படாமல் காணப்பட்டது. | ஊழியர் கடன் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுப்பேன். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகள் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பேன். |